வளன் ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# இரட்டைக் காப்பியங்களில் மாற்றுத்திறனாளிகள்

டே. எட்வின் சார்லஸ்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி -02.

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் இலக்கியம் காலந்தோறும் பல மாற்றங்களை அடைந்தது.சங்க காலத்திலும்,சங்கம் மருவிய காலத்திலும் சிறிய வடிவிலான சில செய்யுள்களும்,பெரிய பாடல்கள் வடிவங்களும் காணப்பட்டது. இவை,காலப்போக்கில் நீண்ட நெடிய பாடல்களாக மாறி,காப்பியங்கள் என்ற நிலையை அடைந்தன. தமிழில் சிலப்பதிகாரம்,மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.இவற்றில், குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்படும் சிலப்பதிகாரத்திலும்,புத்தமதகாப்பியமான மணிமேகலையிலும் காணப்படும் மாற்றுத்திறனாளிகள் பற்றி குறிப்புகளும், சமுதாயத்தில் அவர்களுக்கு இருந்த மதிப்புகளை ஆராய்வதே அவ்வாய்வின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்:**

மாற்றுத்திறனாளிகள் ,குருடர் ,முடவர் ,கண்ணகி ,மணிமேகலை.

physically challenged, blind ,crippled,kannaki,manimakalai.

**முன்னுரை :**

தமிழ் இலக்கியம் சங்ககால முதல் இக்காலம் வரை பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது அதில் நீண்ட கதைகளையும் பாடல்களையும் உள்ளடக்கிய காப்பியங்கள் சோழர் காலத்தில் அதிகமாக தோன்றியது. காப்பியங்களை ஐம்பெரும் காப்பியங்கள் ஐஞ்சிறு காப்பியங்கள் என பகுப்பார்கள் சிலப்பதிகாரம் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் ஆகும் பெற்றுள்ள மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்புகளை எடுத்து கூறுவதே நீ வாயுவின் நோக்கமாக அமைகிறது மாற்றுத்திறனாளிகள் இரட்டைக் காப்பியம் சிலப்பதிகார கலை மணிமேகலையில்

போய் முற்றும் என்பார்கள் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் சில நிகழ்வுகள் இந்திர விழா தெருக்களின் அமைப்பு நாளங்காடி, அல்லங்காடி போன்ற பலவிதமான தகவல்கள் இவ்விரு காப்பியங்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கும் ,மாதவிக்கும் பிறந்த குழந்தைக்கு மணிமேகலை என பெயர் சூட்டும்படியில் மணிமேகலா தெய்வம் கோவலனுக்கு அறிவுறுத்தியது,அதே தெய்வம் மணிமேகலை காப்பியத்தில் மணிமேகலையை மணிப்பல்லவத்தீவிற்கு மணிமேகலா தெய்வம் அழைத்து செல்கிறது. கோவலன், கண்ணகி ஆகியோரின் வாழ்வை மணிமேகலை காப்பியத்தில் மாதவி தன் தோழியான வயந்தமாலை இடம் கூறுகிறாள். இதுபோன்று பல ஒற்றுமைகளை இவ்விரு காப்பியங்களில் காணப்படுவதால் இதனை, இரட்டைக் காப்பியங்கள் என்பார்கள். இந்த இரட்டைக்காப்பியத்தில் இடம் பெறும் மாற்றுத்திறனாளிகள் பற்றி எடுத்து இயம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

**தொல்காப்பியத்தில் உயிரினங்களின் வகைப்பாடு.**

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் மரபியல் என்னும் பகுதியில் உயிரினங்களின் பாகுபாடுகள் குறித்து கூறுகிறார்.

“ ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே”1

(தொல்காப்பியம்,மரபியல் –பக்:520)

என்ற நூற்பாவின் வாயிலாக ஓரறிவு படைத்த புல் முதல் ஆறறிவு படைத்த மனிதர்கள் வரை பல வேறுபாடுகள் உள்ளதைக் கூறுகிறார்

**ஔவையார்**

மனிதர்களின் வாழ்க்கை நிலையை கூறும் போது ,

“அரியது கேட்கின் வரிவடி வேலோய்

மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே

மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்

மூங்கையும் செவிடும் கூனும் குருடும்

பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே

பேடு நீங்கிப் பிறந்த காலையும்

ஞானமும் கல்வியும் நன்குறல் அரிதே "2 (தனிப்பாடல் திரட்டு - பக் 229) என்பார்.

தொடக்க காலத்தில் உடலில் அளவிலோ , மனதளவிலோ குறைபாடு உடையவராக காணப்பட்டால் அவர்களை உடல் ஊனமுற்றவர்கள்என்பார்கள். மற்றவர்கள் தன்னிச்சையாக செய்துகொள்ள முடியும். சிலவேலைகளை மாற்றுத்திறனாளிகள் யாருடைய உதவியவதுபெற்றுமுடித்துக்கொள்வார்கள். இதன்வழியாக மாற்றுத்திறனுடையவர்கள் யாராவது ஒருவரை சார்ந்திருக்கின்றனர். இத்தகைய நிலை பிறக்கும் போதும், சிலருக்கு இடையிலும் ஏற்படலாம்.இவை உடலில் குறைபாடு, ஐம்புலன்களில் குறைபாடு, அறிதிறன் அல்லது அறிவு திறன் குறைபாடு, உளவியல் குறைபாடு ,பிற நோயின் காரணமாக உடலில் ஏற்படும் மாறுபட்ட குறைபாடுகள் உள்ளவர்களை மாற்றத்திறனாளிகள் என்று கூறுகிறப்படுகிறது.

**பிங்கல நிகண்டு _ விளக்கம்.**

"குருடன் -அந்தகன் ,சிதடன்.

முடவன் _பங்கு, சூனியன்

குறளன்_ குஞ்சன், வாமனன், சிந்தன்

செவிடன் _வதிரன், செவிடன்

ஊமை _மூகை ,மூங்கை

கூனன்_ கோணன்"3 என (பழைய தமிழ் அகராதி பிங்கல நிகண்டு - பக்111:112)

மாற்றுத்திறனாளிகள் பற்றியவிளக்கம் தருகிறது.

**மாற்றுத்திறனாளிகளுக்கான சட்டங்கள்:**

மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்களை செய்திட 1993 ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கான தனி இயக்கம் சமூக நலத்துறையில் இருந்து பிரிந்து தனியாக

ஏற்படுத்தப்பட்டது. பின்பு ,1994ல் முதல் முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கான விரிவான மாநில கொள்கையை தமிழக அரசு வெளியிட்டது.

**மாற்றுத்திறனாளிகளின் வகைகள்:**

மாற்றுத்திறனாளி என்பவர் உடலளவிலோ மனதளவிலோ பாதிக்கப்பட்டு இருப்பார்கள் இவர்களில் பாதிப்பை பின்வரும் வழிகளில் வகைப்படுத்தலாம் .

1.மரபணுவினால் பிறப்பிலேயே ஏற்படும் மாற்றங்கள்.

2. தாயின் கருவில் இருக்கும் பொழுது அல்லது இறந்த உடனே ஏற்படும் நோயின் மூலம் ஏற்படும் மாற்றங்கள். 3.நோயினாலோ அல்லது விபத்தினாலோ ஏற்பட்ட இழப்புகள்.

4.தெரியாத சில காரணங்களால் பாதிப்பு ஏற்படும்.

உடல் குறைபாடு ,புலன் குறைபாடு பார்வை குறைபாடு ,கேள்வி குறைபாடு, நுகர்ச்சி மற்றும் சுவை சார் உடல் குறைபாடு ,மன வளர்ச்சி குறைபாடு, உளப் பிறழ்ச்சி போன்ற பலவகை குறைபாடுகள் உடையவர்களை மாற்றுத்திறனாளிகள் என வகைப்படுத்தப்படுகிறது.இனி, சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளார் மாற்றுத்திறனாளிகள் பற்றியக் குறிப்பை காண்போம்.

**சிலப்பதிகாரத்தில் மாற்றுத்திறனாளிகள் .**

இளங்கோவடிகள் 2 ஆம் நூற்றாண்டில் தம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் வணிக முறை,நாடகக்கலை, இசை கூறுகள், பண்பாடு கூறுகள், நகரத்தினுடைய அமைப்பு, சுங்கச்சாவடியினுடைய செயல்பாடு, துறைமுகத்தின் அமைப்பு ஆகியவற்றை தொகுத்துக் கூறியுள்ளார். அந்த, வரிசையில் மாற்றுத்திறனாளர் என்ற சிறப்பு பண்புகளை பெற்றவர்கள் பற்றிய குறிப்புகளை காப்பியத்தில் சில இடங்களில் காணப்படுகிறது.

**புகார் காண்டம்:**

புகார் நகரின் சிறப்பை கூறும் இந்திர விழா எடுத்துக் காதையில் வெளியிட மன்றம்,இலஞ்சி மன்றம், நெடுங்கல் நாட்டப்பட்ட மன்றம், சதுக்க பூத மன்றம், பாவை மன்றம் என்ற ஐவகை மன்றங்களை பற்றிய குறிப்புகளை கூறி செல்லுவார் .இதில் இலஞ்சி மன்றம் பற்றி கூறும் பகுதியில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகிறது.

" கூனும் குறளும் ஊமும் செவிடும்

அழகு மெய்யாளரும் முழுகினர் ஆடி

பழுது இல்காட்சி நல்நிறம் பெற்று

வலம் செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்"4 (இ.வி.எ.காதை_118:122)

புகார் நகரில் கூன் முதுகினரும், குள்ளஉருவினரும், வாய்பேசமுடியாதஊமைகளும், காதுகேளாச் செவிடர்களும், தொழுநோயால் அழுகிய உடல் உடையவர்களும் முழுகி நீராடியவுடன் தங்கள் உடல் குறையும், பிணியும் நீங்கி நல்லுடலும் அழகிய தோற்றமும் பெற்று, மகிழ்ந்து வணங்கிச் செல்லும் பொய்கையை உடைய இலஞ்சி மன்றம் ஒன்று இருந்தது என கூறுகிறார்.

**மதுரைக்காண்டம்.**

கோவலன், மாதவியை விட்டு பிரிந்து மீண்டும் கண்ணகி உடன் சென்று வாழலாம் என நினைத்து கண்ணகியிடம் வந்த போது மனம் வருந்திய கோவலன் .பின்பு கோவலனும், கண்ணகியும் மதுரைக்கு சென்றனர். மதுரையில் சிலம்பை விற்க சென்றபோது கோவலன் தன் ஊழ்வினைக் காரணமாக கொலை செய்யப்பட்டார். இதனை பற்றி இதனை பற்றி விரிவாக கூறும் மதுரைக்காண்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. வழக்குரைக்காதையில் பாண்டிமாதேவிக்கு கனா காண்கிறாள். அதனை, மன்னனிடம் கூறுவதற்காக புறப்படுகிறாள், அப்போது அவளுக்கு மாற்று திறனாளிகள் உதவி செய்கின்றனர்.

"கண்ணி ஏந்தினர் பிணையல் ஏந்தினர்

கவரி எந்தினர் தூபம் ஏந்தினர்

கூனும் குறளும் ஊமும் கூடிய

குறுந்தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர

நரைவிரை இய கூறுங்கூதலர்

உரை விரை இயர் பலர் வாழ்த்திட" 5(வழக்குரைக்காதை_ 16 :21)

கோப்பொருந்தேவி மன்னனைக் காண செல்லும் முன் அரசுக்கு தேவையான சில வண்ணப்பொடிகளையும், சுண்ணப் பொடிகளையும் ஏந்தி நின்றானர். சிலர் வெண் சாமரம் வீசினர் ,சிலர் வாசனை தூபம் இட்டனர் ,கூன் முதுகுடையவரும், குள்ளர்களும்,வாய்பேச முடியாதவர்களும் ஆகிற குற்றேவல் செய்யும் இளைஞர்கள் பலர் நெருங்கி வர, நரைத்த கூந்தலை உடைய முதிய பெண்கள் சிலர் கோப்பெருந்தேவி வாழ்க என வாழ்த்தி நின்றனர்.

அரண்மனையில் உடல் அளவில் பாதிக்கப்பட்ட சிலருக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

**வஞ்சிக்காண்டம்**

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை எடுக்க கங்கை வரை சென்றதனால், மன்னனை பிரிந்த தலைவி வருத்தமுடன் காணப்படுகிறாள்.

“தோள் துணை துறந்த துயர் ஈங்கு ஒழிக எனப்

பாட்டோடு தொடுத்துப் பல் யாண்டு வாழ்த்தச்

சிறுகுறும் கூனும் குறளும் சென்று

பெறுகநின் செவ்வி பெறுமகன் வந்தான்”6( நீர்ப்படைக் காதை _212: 215)

வடதிசை சென்று சேர மன்னன் வெற்றிவாகைச்சூடி வருகிறான் என்ற சேதியினை அறிந்த அரசியின் உதவி பெண்கள் ஓடிப்போய் தலையிடம்” கணவனை பிரிந்து வருந்தும் கவலையை கைவிடு உன் கணவன் வருகிறான்” என்று பாடி மகிழ்ந்து பல்லாண்டு கூறினர். சிற்றேவல் செய்யும் கூனரும் , குள்ளரும் அரசி வேண்மாளிடம் சென்று ‘அரசர் பெருமான் தலைநகர் நோக்கி வந்து கொண்டிருக்கிறார், அழுவதை விடு. உன்னை அழகு செய்து கொள், உன் அழகு மலர்க் கூந்தல் அலங்காரம் பெறட்டும்’ என்றனர் .இதன் மூலம் மாற்றுத் திறனுடைய மாற்று திறனாளிகள் அரண்மனையில் முதலிடம் பெறுகிறதை அறிய முடிகிறது.

சேர மன்னனின் மனைவி வேண்மாள் வெண்ணிலாவைக் காண வந்தபோது, அரசனும் வந்தான். அரசியசியுடன் பலரும் வந்தனர். இதில் மாற்றுத்திறனாளிகளும் வந்துள்ளதை அறிய முடிகிறது.

“ கூனும் குறளும் கொண்டன ஒரு சார்

வண்ணமும் சுண்ணமும் மலர் பூம்பிணையலும்

பெண்அணிப் பேடியர் ஏந்தினர் ஒருசார் “ 7 (நடுகற்காதை_ 58: 60)

வேண்மாள் வெண்ணிலாவை காண நிலா மற்றும் வந்தபோது கஸ்தூரிக் குழம்பும் தொய்யில் எழுதும் வெண் சந்தனமும் ஒரு பக்கம் ஏந்தி நின்றனர். மறுபக்கம் கூனரும், குள்ளரும் வண்ணப்பொடிகளையும், சுண்ணப்பொடிகளையும், வாச மலர்களையும் , பெண் போலும் அழகுடைய பேடிகள் ஒரு பக்கம் சுமந்து நின்றனர். இதன் வழியாக அரசி சில இடங்களுக்கு தனியாக செல்லாமல் படைசூழ எல்லா இடங்களுக்கும் சென்று வருந்துள்ளனர். இவைப்

போன்று சிலப்பதிகாரத்தில் பொற்கைப் பாண்டியன் பற்றிய குறிப்பும், கண்ணகி ஒருமுலை குறைந்த திருமா பத்தினி என்று அழைப்பதால் , உடல் உறுப்பில் சிதைவு ஏற்பட்டுள்ளதால் அவரையும் மாற்றுத்திறனாளியாகப் பார்க்க முடிகிறது.

**மணிமேகலை காப்பியத்தில் மாற்றுத்திறனாளிகள்**

புத்த சமய கருத்துக்கள் அதிகமாக கூறப்படும் மணிமேகலை காப்பியத்திலும் மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் காணப்படுகிறது .

**சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை:**

இக்காதையில் சக்கரவாளம் என்பது சுடுகாடு ஆகும். அதன் தன்மையை இந்த காதையில் சொல்லும் போது, ஒரு நாள் சார்ங்கலன் என்ற சிறுவன் சுடுகாட்டிற்கு சென்று அந்த இடத்தின் இயல்புகளை பார்க்கும் போது, அவனை ஒரு பேய் அச்சமூட்டியது, பயந்து போன அவன், தன் தாயின் முன்னால் வந்து நடந்ததை கூறிய பின், சார்ங்கலன் உயிரை போக்கிக் கொள்கிறான். இறந்த மகனை அவனுடைய தாய் சம்பாதி தெய்வத்தின் முன் முறையிடும்போது அங்கு ,மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது.

“ பார்ப்பான் _ தன்னோடு,கண்இழந்து இருந்த இத்

தீத்தொழி லாட்டியொன் சிறுவன் தன்னை”8 (ச.உ.காதை - 132:133)

அவள், நான் கண்ணிழந்த கணவனோடு வாழும் கொடிய வினையுடையோன் வேறு யாரும் துணை இல்லாதவள் என்று சம்பாதி தெய்வத்திடம் கூறுகிறாள்.

**அறவணடித் தொழுத காதை:**

மணிமேகலை, மணிப்பல்லத்தீவிற்கு சென்று ,அட்சயப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு புகார் நகரத்திற்கு வரும் போது,அறவணடிகளை வணங்கி புத்தரின் பெருமைகளைப் பற்றிக் கூறும் போது மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகிறது .

“விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும்

கலங்குஅளுர் , நகரரும் பேயும், கைவிடும்

கூனும், குறளும், ஊமும், செவிடும்

மாவும் ,மருளும் மன் உயிர் பெறாஅ”9 (அற.தொ.காதை -94:97)

விலங்குகளும் மக்களும் அச்சம் தரும் பகைமையும் நீக்கும், நரகரும் பேயும் கலக்கம் தரும் துன்பத்தை விட்டோழியும் மக்கள் உயிர்கள் ,கூன் வடிவம், குறுகிய வடிவம் ,ஊமைப் பிறவி செவிட்டுப் பிறவி ,விலங்கு இயல்பு, அறியாமையால் மருட்சிக் கொள்ளும் தன்மை ஆகிய பிறவிகளை உடையவர்கள் புத்தர் தோன்றிய பின், இந்த நிலையை அடையாமல் குணமடைந்து. மீண்டும், இந்தநிலையை அடையமாட்டார்கள் என்கிற செய்தி வழியாக மாற்றுத்திறனாளிகள் குணமடைவார்கள் என்ற செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை:**

ஆபுத்திரன் தன் வரலாற்றை உணர்த்த பின்பு , இவனுக்கும் பார்ப்பனர்களுக்கும் இடையே நடந்த விவாத்ததில் "ஆபுத்திரன் பார்ப்பனர் என்பதற்குரிய தகுதியை இழந்துவிட்டான்" எனக் கூறி அவனுடைய பிச்சை பாத்திரத்தில் கற்களை இட்டனர். அதனால் ,அவன் தென் மதுரைக்கு சென்று பிச்சை எடுத்தான். அப்போது அவன்

"காணார் ,கேளார் ,கால் முடப்பட்டோர்

பேணுநர் இல்லோர்,பிணிநடுக் குற்றோர்

யாவரும் வருக என்று இசைந்து உடன்ஊட்டி" 10(ஆபு.தி.அ.காதை-111:113)

குருடர் ,செவிடர், முடவர் ,ஆதரவற்றோர் கடும் நோயால் துன்புறுவோர் அனைவரும் வருக ! என்று அழைத்து உணவு அளித்தான் .எல்லோரும் உணவினை உண்டபின் பிச்சை பாத்திரத்தை தலையணையாக்கி துயில் கொள்வான்.

**கச்சிமா நகர் புக்க காதை :**

மணிமேகலையில் சமய கணக்கர் தம் திறங்கேட்டகாதையில், புகார் நகரின் சிறப்புகளையும் , பலவகை வீதிகளையும், மாடங்களையும், தானியங்களையும் பற்றிய பல குறிப்புகள் இடம்பெறுவதில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்புகளும் இடம் பெறுகிறது.

" காணார் கேளார் கால் முடம் ஆனோர்

பேணா மாக்கள்,பேசார் , பிணித்தோர்

படிவ நோன்பியர் ,பசிநோய் உற்றோர்

மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்" 11 (கச்சிமா.ந.பு.காதை-221:224)

அட்சய பாத்திரத்தை கையில் வைத்திருந்த மணிமேகலை புத்த தேவனின் பாத பீடிகையில் வைத்துவிட்டு, பதினெட்டு வகையான மொழிகள் பேசும் எண்ணற்ற மக்களில் குருடர், செவிடர்

,முடவர், ஆதரவற்றோர் ஊமையர், நோயுற்றோர், தவவடிவு பூண்டு காப்போர் , பசிப்பிணியால் வாடுவோர் ,உடையுமின்றி வறுமையில் உழல்வோரும் ஆகிய மக்கள் அனைவரும் , பல விலங்குகளும் சேர்ந்து ஒருங்கே வந்து மணிமேகலின் அருகில் நின்றனர். இவர்கள், அனைவருக்கும் மணிமேகலை உணவு கொடுத்தாள்.

**பவத்திற மறுக்கெனப் பாவை நோற்ற காதை:**

இக்காதையில் தன்னுடைய முற்பிறப்பு வரலாற்றை அறிந்த மணிமேகலைத் தானத்தை மேற்கொண்டு, சீலங்களின் வழிநின்று , இன்று புத்தன், தருமம், சங்கம் என்னும் கொள்கைகளான மும்மணியையும், மனம்,மொழி, மெய் என்ற மூன்றாவது வழிபட்டு ,புத்தன் திருவடியைப் புகழ்கிறாள்.பின்பு புத்தகத்தில் அடைக்கலம் புகுந்தாள். அப்போது கூறிய வார்த்தைகளில் மாற்றுத்திறனாளிகள் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது .

“உணர்ச்சி உரு,அரு , வாயில் ஊறே

நுகர்ச்சி, பிறப்பே, மூப்பு ,பிணி, சாவு

இவை நிகழ்ச்சி பயன்” 12 ( பவத்திற.ம.பா.நோ.காதை-172:173)

உணர்ச்சி ,அருவுருவாயில், ஊறு நுகர்ச்சி, வேட்கை, பற்று, பவம், தோற்றம் ஆகிய இந் நிதானங்கள் காலவகையில் நிகழ்காலம் என கூறப்படும். பிறப்பும், அதனோடு தோன்றும் பிணி, மூப்பு ,சாவு, அவலம் அழுகை, கவலை, செயலற்ற தன்மை என்பதை எதிர்காலத் தன்மை என்பார்கள்.இதில் எந்த செயலும் செய்ய முடியாமல், செயலாற்ற நிலையில் இருப்பவர்கள் மாற்றுத்திறனாளி வகையில் அடங்குவார்கள்.

**முடிவுரை:**

காப்பியங்கள் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மாற்றுத்திறனாளிகள் பற்றியக் குறிப்புகள் இரட்டைக்காப்பியங்களில் பலஇடங்களில் காணப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் அரண்மனையில் பணிசெய்யக்கூடிய அளவிற்கு மாற்றுத்திறனாளிக்கு உரிமை கொடுக்கப்பட்டது போல மணிமேகலைக் காப்பியத்தில் காணப்படவில்லை.

**துணைநூற்பட்டியல்.**

1.தொல்காப்பியம் -இளம்பூரணர்உரை, கௌரா பதிப்பகம், சென்னை .

2.ஔவையார் -தனிப்பாடல் திரட்டு,கௌரா பதிப்பகம், . சென்னை

3 இலம்போதரன். சு. -பழைய தமிழ் அகராதி பிங்கல நிகண்டு ,வசந்தா பதிப்பகம், சென்னை.

4.மாணிக்கவாசகர்.ஞா. -சிலப்பதிகாரத் தெளிவுரை ,உமாபதிப்பகம், சென்னை.

5.மாணிக்கவாசகர்.ஞா. -சிலப்பதிகாரத் தெளிவுரை ,உமாபதிப்பகம், சென்னை.

6.மாணிக்கவாசகர்.ஞா. -சிலப்பதிகாரத் தெளிவுரை ,உமாபதிப்பகம், சென்னை.

7.மாணிக்கவாசகர்.ஞா. - சிலப்பதிகாரத் தெளிவுரை ,உமாபதிப்பகம், சென்னை.

8.மாணிக்கவாசகர்.ஞா. -சிலப்பதிகாரத் தெளிவுரை ,உமாபதிப்பகம், சென்னை.

9. தண்டபாணி. துரை, -மணிமேகலை தெளிவுரை ,உமா பதிப்பகம்,சென்னை.

10.தண்டபாணி. துரை, -மணிமேகலை தெளிவுரை ,உமா பதிப்பகம்,சென்னை.

11.தண்டபாணி. துரை, -மணிமேகலை தெளிவுரை ,உமா பதிப்பகம்,சென்னை.

12.தண்டபாணி. துரை,- மணிமேகலை தெளிவுரை ,உமா பதிப்பகம்,சென்னை.

13. https://www.tn.gov.in/ta/department/35.

.